~175

SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA
CENTER FOR EXTERNAL DEGREES AND PROFESSIONAL LEARNING

# THIRD YEAR EXAMINATION IN BACHELOR OF BUSINESS ADMINISTRATION (EXTERNAL) – 2011 / 2012

HELD IN DECEMBER- 2013

## BBA 32 – FINANCIAL AND INVESTMENT & PORTFOLIO MANAGEMENT

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
ஒவ்வொரு வினாவும் சமமான புள்ளிகளைக் கொண்டுள்ளது.
கணிப்பான்கள் அனுமதிக்கப்பட்டுள்ளது. **நேரம்: 03 மணித்தியாலங்கள்**

**01.** i) நிதி முகாமையாளரினால் எடுக்கப்படுகின்ற முக்கியமான தீர்மானங்களை சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

ii) "தனிப்பட்டவர்கள் ஏதாவதொரு தொகைப்பணத்தை எதிர்காலத்தில் வைத்திருப்பதனை விட தற்பொழுது வைத்திருப்பதனையே விரும்புகினிறனர்". ஏன்? காரணங்கள் தருக. (02 புள்ளிகள்)

iii) நீர் ரூபாய் 5000 ஐ 12% இணைந்த வட்டி வீத்தில் ஒவ்வொரு ஆண்டு ஆரம்பத்திலும் வைப்பு செய்தால் ஐந்தாவது வருட முடிவில் உள்ள எதிர்காலப் பெறுமதி என்ன? (03 புள்ளிகள்)

iv) காலாண்டு அடிப்படையில் வட்டி செலுத்துகின்ற முதலீட்டில் 10 ஆண்டுகளுக்கு ருபாய் 50,000 ஐ முதலீடு செய்திருப்பின் அதனுடைய எதிர்காலப்பெறுமதி என்ன? வினைத்திறனான வட்டி வீதம்( Effective interest rate) என்ன? (04 புள்ளிகள்)

v) உன்னுடைய சகோதரி பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற உள்ளார். 20 வருடங்களுக்கு முன்னர் உன்னுடைய சகோதரி பிறந்த போது உன்னுடைய தந்தை ரூபாய் 5000 ஐ ஆரம்ப வைப்பிலிட்டு ஒரு சேமிப்புக் கணக்கை திறந்தார். தற்பொழுது அக்கணக்கில் ருபாய் 19348.42 நிலுவையாக உள்ளது எனின், சராசரியாக உழைத்த இணைந்த வருவாய் வீதம் என்ன? (03 புள்ளிகள்)

vi) நிதி மூலம் என்றால் நீர் கருதுவது என்ன? பட்டியலிடுக. (02 புள்ளிகள்)

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

**02.** i) உமக்கு ரூபாய் 200,000 கடன் தேவைப்படுகின்றது. அதனை இரண்டு வருடத்தில் திருப்பிச் செலுத்த விரும்புகின்றீர். வங்கியானது 12% வட்டியில் கடன் வழங்கவுள்ளது எனின், உமது மாதாந்த கட்டணம் என்னவாக இருக்கும்? (03 புள்ளிகள்)

ii) வருடார்ந்தம் 10% வட்டி செலுத்துகின்ற ரூபாய் 1000 பெறுமதியான நான்கு வருட முறிகளை விற்பனை செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதன் பெறுமதியானது அதனுடைய ஆயுட்காலத்தில் சம தொகையில் மீளழிப்பு செய்யப்படும். முதலீட்டாளரின் ஆகக் குறைந்த வருவாய் வீதம் 12% எனின், அம்முறியை கொள்வனவு செய்வாற்கு இன்று நீர் எவ்வளவு செலுத்த வேண்டும்? (04 புள்ளிகள்)

iii) X கம்பனியின் உழைப்பு, பங்கிலாப வளர்ச்சி என்பன பகுப்பாய்வாளர்களின் முரண்பட்ட கருத்துக்கு உட்பட்டுள்ளன. திரு. அமல் என்பவர் பங்கிலாபமானது எல்லையற்ற காலத்திற்கு 5% த்தினால் வளர்ச்சியடையுமெனெ எதிர்வுகூறுகிறார். ஆயினும் திரு. அஜ்மல் என்பவர் அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு பங்கிலாபமானது 10% த்தினால் வளர்ச்சியடையுமெனெவும் அதன் பின்னர் எல்லையற்ற காலத்திற்கு 5% க்கு வீழ்ச்சியடையுமெனெவும் எதிர்வுகூறுகிறார். X கம்பனியின் தற்போதைய பங்கிலாபம் ரூபாய் 5.00, அதனுடைய பீட்டா (Beta) பெறுமதி 1.5, பொருளாதாரத்தின் இடரற்ற சராசரி திரும்பல் வீதம் 6%, மற்றும் சராசரி சந்தை திரும்பல் வீதம் 12% ஆகும்.

அ. X கம்பனியின் முதலீட்டாளர்களினால் சாதாரண பங்கிற்கு எதிர்பார்க்கப்படுகின்ற திரும்பல் வீதம் என்ன? (02 புள்ளிகள்)

ஆ. திரு. அமல் என்பவர் பங்கொன்றினை ரூபாய் 65.00 க்கு கொள்வனவு செய்ய உத்தேசிக்கின்றார். இத்தீர்மானம் புத்திசாதுரியமானதா? (02 புள்ளிகள்)

இ. திரு. அஜ்மல் என்பவரின் கருத்தின்படி X கம்பனியின் பங்கொன்றின் பெறுமதி என்ன? (05 புள்ளிகள்)

iii) ரூபாய் 1000 முகப் பெறுமதியையுடைய முறியொன்றின் தற்போதைய சந்தைவிலை ரூபாய் 980 ஆகும். முதிர்வடைவதற்கு ஐந்து ஆண்டுகள் உள்ளது. இது முகப் பெறுமதியில் மீள செலுத்தப்படும். வட்டியானது அரையாண்டு அடிப்படையில் செலுத்தப்படுகின்றது எனவும் கூப்பன் வீதம் 15% எனவும் கொண்டு விளைவு வீதத்தை கணிப்பிடுக. (04 புள்ளிகள்)

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

03. i) ஒரு கம்பனியானது பின்வரும் இரண்டு செயற்றிட்டங்களிலிருந்து ஒரு செயற்திட்டத்தினை தெரிவு செய்வது தொடர்பான பிரச்சினையை முகங்கொடுக்கின்றது. செயற்திட்டம் A ஆனது ஆரம்ப முதலீடாக ரூபாய் 200,000 வேண்டி நிற்கின்றது. அத்துடன் செயற்பாட்டு

செலவு வருடாந்தம் ரூபாய் 70,000 ஆகும். செயற்திட்டம் B ஆனது ரூபாய் 300,000 முலதனத்தை வேண்டி நிற்கின்றது. இது செயற்பாட்டு செலவாக வருடாந்தம் ரூபாய் 40,000 அடுத்து வருகின்ற 8 வருடங்களுக்கு ஏற்படுத்தும். இரு செயற்றிட்டங்களுமே எட்டு வருட வாழ்வு காலத்தை கொண்டிருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் செயற்திட்டம் B ஆனது ரூபாய் 28,000 ஐ எஞ்சிய பெறுமதியாக கொண்டிருக்கின்ற அதேவேளை செயற்திட்டம் A ஆனது ரூபாய் 8,000 எஞ்சிய பெறுமதியாக கொண்டிருககும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்னறது. அத்துடன் கம்பனியினுடைய வரி 50% ஆகவும் மூலதனச் செலவு 10% ஆகவும் உள்ளது. பெறுமானத்தேய்வானது நேர்கோட்டு அடிப்படையில் கணிப்பிடப்படுகின்றது எனவும் எஞ்சிய பெறுமதி மீது வரியில்லை எனவும் கருதுக. எந்த செயற்றிட்டம் தெரிவு செய்யப்படும்.

(07 புள்ளிகள்)

ii) “ஒரு கம்பனியானது வளர்ச்சியடையுமாயின் அதனுடைய மூலதனத்தில் எல்லைச் செலவானது, மூலதனத்தின் சராசரிச் செலவை விடக் குறைவாக இருக்கும்” இக்கூற்றுடன் நீர் இணங்குகின்றீரா? சுருக்கமாக விளக்குக. (03 புள்ளிகள்)

iii) ஒரு கம்பனியானது ஒரு செயற்றிட்டத்தில் முதலீடு செய்வதற்காக தொகுதிக்கடன், முன்னுரிமைப்பங்கு, சாதாரண பங்கு என்பனவற்றை வழங்குவதன் மூலம் ரூபாய் 1200,000 நிதியீட்டம் செய்வதற்கான சாத்தியத்தன்மை பற்றி கவனத்திற்கொள்கின்றது. அச் செயற்றிட்டத்திலிருந்து எதிர்பாக்கப்படுகின்ற ஆகக் கூடிய வருவாய்வீதம் 20% ஆகும். வழங்குதலினுடைய சந்தைப் பெறுமதியும் புத்தகப்பெறுமதியும் பின்வருமாறு இருக்கின்றது.

| | **புத்தகப் பெறுமதி ரூபாவில்** | **சந்தைப் பெறுமதி ரூபாவில்** |
|---|---|---|
| சாதாரண பங்குகள் | 400 000 | 600 000 |
| முன்னுரிமைப் பங்குகள் | 200 000 | 240 000 |
| தொகுதிக்கடன்கள் | 300 000 | 360 000 |
| | 900 000 | 1200 000 |

பின்வரும் செலவுகளானது மேற்குறிப்பிட்ட மூலதனம் வழங்குதலுடன் தொடர்புபட்டவைகளாக எதிர்பாக்கப்படுகின்றது. (வரி 50% எனக் கொள்க)

ரூபாய் 100 முகப்பெறுமதியினுடைய 16% தொகுதிக்கடன்களை நிறுவனம் விற்பனை செய்ய முடியும் வழங்குதல் செலவானது முகப்பெறுமதியில் 2% மாக இருக்கும் .

11% முன்னுரிமைப்பங்குகள் ரூபாய் 120 க்கு விற்பனை செய்யப்படும். இதன் முகப்பெறுமதி ரூபாய் 100 ஆகும். அத்துடன் நிறுவனமானது ரூபாய் 7.25 ஐ ஒவ்வொரு பங்கிற்கும் வழங்குதல் செலவாக செலுத்த வேண்டியிருக்கும்.

நடைமுறையில் நிறுவனத்தின் சாதாரண பங்கு ரூபாய் 100 க்கு விற்பனை செய்யப்படுகின்றது. நிறுவனமானது ஒரு பங்கிற்கான பங்கிலாபமாக ரூபாய் 12 ஐ செலுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது. அடுத்த வருட இறுதியில் இது 7 வீதத்தினால் வளர்ச்சியடைந்து செல்லுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால் புதிய சாதாரணப்பங்குகள் ரூபாய் 145 க்கு விற்பனை செய்யப்பட முடியும். பங்கு வழங்குதல் செலவானது பங்கொன்றுக்கு ரூபாய் 5 ஆக இருக்கும்.

அ) சந்தைப் பெறுமதியின் அடிப்படையில் மூலதனத்திற்கான நிறையளித்த சராசரிச் செலவினை (WACC) கணிப்பிடுக. (08 புள்ளிகள்)

ஆ) இந்த செயற்றிட்டம் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமா? காரணங்களை முன்வைக்குக. (02 புள்ளிகள்)

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

04. i) நிதிச்சந்தை என்பதனை வரையறுக்குக. ஏன் இது பொருளாதாரமொன்றில் முக்கியமானதாக உள்ளது? (05 புள்ளிகள்)

ii) பின்வருவனவற்றை வேறுபடுத்துக.

அ) மூலதனச் சந்தையும் பணச் சந்தையும்
(Capital market and Money market)

ஆ) நுட்ப ஆய்வும் அடிப்படை ஆய்வும்
(Technical analysis and fundamental analysi )

இ) பலவீன வினைத்திறனும் உறுதி வினைத்திறனும்
(Weak form of efficiency and strong form of efficiency)

ஈ) நிதிச்சொத்துக்களும் உண்மைச சொத்துக்களும்.
(Financial assets and real assets)

உ) முறையான ஆபத்தும் முறையற்ற ஆபத்தும்
(Systematic risk and Unsystematic risk)

ஊ) பிணைகள் சந்தைக் கோடும் மூலதன சந்தைக் கோடும்
(Security market line and capital market line)

எ) வினைத்திறனான கலவையும் உத்தம கலவையும்
(Efficient portfolios and optimal portfolio) (14 புள்ளிகள்)

iii) ரூபாய் 325,500 செலவுடைய முதலீடு ஒன்று மூன்று வருடத்தின் பின்னர் அதன் பெறுமதி ரூபாய் 420,000 ஆகவுள்ளது. வருடார்ந்த வைத்திருத்தல் காலத்திற் வளைவு (annual holding period yield) என்ன? (03 புள்ளிகள்)

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

**05.** i) பங்கு A, பங்கு B என்பனவற்றுடன் தொடர்புபட்ட பின்வரும் தரவுகளை கவனத்திற் கொள்க.

| பங்கு A யினுடைய வருவாய் வீதம் | பங்கு A யினுடைய வருவாய்கான சாத்தியத்தன்மை | பங்கு B யினுடைய வருவாய் வீதம் | பங்கு B யினுடைய வருவாய்கான சாத்தியத்தன்மை |
|---|---|---|---|
| 5 | 0.35 | -5 | 0.10 |
| 8 | 0.30 | 5 | 0.45 |
| 10 | 0.25 | 15 | 0.25 |
| 15 | 0.10 | 30 | 0.20 |

அ) இவ்விரண்டு பங்குகளுக்குமான எதிர்பார்க்கப்படுகின்ற வருவாய் வீதத்தை தனித்தனியாக கணிப்பிடுக. இந்த அளவீட்டினால் விரும்பப்படும் பங்கு எது? (03 புள்ளிகள்)

ஆ) இவ்விரண்டு பங்குகளுக்குமான நியமவிலகலை தனித்தனியாக கணிப்பிடுக. இந்த அளவீட்டினால் விரும்பப்படும் பங்கு எது? (06 புள்ளிகள்)

இ) ஒவ்வொரு பங்கிற்குமான விலகல் குணகத்தைக் (Coefficient of variation) கணிப்பீடு செய்க. இந்த அளவீட்டினால் விரும்பப்படும் பங்கு எது? (03 புள்ளிகள்)

ii) A,B,C எனும் மூன்று பிணைகளை உள்ளடக்கிய ஒரு கலவையை (portfolio) கவனத்திற் கொள்க. ஒவ்வொரு பிணைகளினதும் முதலீட்டின் அளவு முறையே 25%, 50%, 25% ஆகும். இணைவுத் தாயம் ( correlation matrix) கீழே கொடுக்கப்பட்டடுள்ளது.

| பங்கின் பெயர் | A | B | C |
|---|---|---|---|
| A | 1.0 | -1.0 | 0.6 |
| B | -1.0 | 1.0 | 0.3 |
| C | 0.6 | 0.3 | 1.0 |

ஆபத்து மற்றும் வருவாய் வீதம் என்பன பின்வருமாறு.

| பங்கின் பெயர் | வருவாய் வீதம் | ஆபத்து வீதம் |
|---|---|---|
| A | 10 % | 09 % |
| B | 15 % | 10 % |
| C | 20 % | 12 % |

நீர் பின்வருவனவற்றை கணிப்பிடுமாறு வேண்டடப்படுகின்றீர்

அ. கலவையினுடைய எதிர்பார்க்கப்படுகின்ற வருவாய் வீதம் (Expected return of portfolio) (01 புள்ளி)

ஆ) மாறல் மாறல்திறன் தாயம் ( Variance, covariance matrix). (03 புள்ளிகள்)

இ) இக்கலவையினுடைய நியமவிலகல் (Standard deviation of this portfolio).

(04 புள்ளிகள்)

**(மொத்தம் 20 புள்ளிகள்)**